REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 174

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY ! THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மார்கழி 18உ சனி (2-1-54) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 19உ ஞாயிறு (3—1—54)

இந்தியாவின் பொருளியல் புதிர்!

பெற்ற தாய்க்கு இறுதிக் கடன் செய்யவும் 'பரோல்' மறுப்பு!

—:X:—

கே. வி. கே. சாமியை தற்காலிகமாக விடுதலை செய்யவும் முடியாதாம்!

திருநெல்வேலி, டிச. 31—

தூத்துக்குடி சதி வழக்கில் இணைக்கப்பட்ட தோழர் கே. வி. கே. சாமி சார்பில், அவரைப் பரோலில் விடும்படி அட்வகேட் எம். நெல்லையப்பபிள்ளை இன்று முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் மனுக் கொடுத்தார்.

டிசம்பர் 26-ந் தேதியன்று மேலகரால் கிராமத்தில் தோழர் கே. வி. கே. சாமியின் தாயார் இறந்ததை குறித்து, இறுதிக் கடன் செய்ய வேண்டியதால் பரோலில் விட, மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மனுவை ஸ்பெஷல் பிராசிகியூட்டர் திண்ணாயிரம் பிள்ளை ஆட்சேபித்தார்:—"இந்த வழக்கில் சாட்சியம் சொல்ல வேண்டியவர்கள் பலர் இருப்பதாகவும், இந்தச் சமயத்தில் முதல் எதிரியை பரோலில் விடுதலை செய்வதால், சாட்சிகளை, அவர் தமக்கு ஆதரவாக திருப்பக்கூடும்," என்று வாதாடினர்.

மாஜிஸ்திரேட் மனுவை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கையில், எதிரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும், பிராசிகியூஷன் தரப்பு முதல் சாட்சியும் ஆஸ்பத்திரியில் இருந்து வருவதாகவும், எதிரியின் செல்வாக்கு காரணமாக, அவ்வருவர் எதிர் தரப்பு சாட்சியாக மாறி விட்டாரென்றும், ஆகவே; எதிரியை பரோலில் விடுவது பொது நியாயத்திற்கு விரோதமானது மட்டுமென்றி, உயர்நீதிமன்ற உத்தரவுக்கும் மாறானதாகும்" என்றார் —ச. கி.

ஓமந்தூரார் மீது சி. ஆர். பாய்ச்சல்!

குருகுலத்திற்கென கொடுத்த நிலத்தை திருப்பிக்கொடு என்கிறாராம்!

சென்னை, ஜன. 2—

சென்னை மாநில முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூரார் ராமசாமி ரெட்டியார் வடலூரில் குருகுலம் ஒன்றை ஏற்படுத்தி நடத்திவரும் விஷயம் எல்லோரும் அறிந்ததே.

இக் குருகுலத்திற்காக, சென்னை சர்க்கார், 200 ஏக்கர் நிலம் அளித்துள்ளது. சுமார் ரூ. 15,000-க்கு மேல் செலவு செய்து இந்த நிலத்தை ரெட்டியார் பண்படுத்தி வைத்திருந்தார்.

தற்போது அவர், ஆச்சாரியார் சர்க்காரின் அத்து மீறிய போக்கைக் கண்டித்து வருவதால், ஆச்சாரியார் சர்க்கார், அவர்மீது கைவைக்க ஆரம்பித்து விட்டதாகத் தெரிகிறது.

இதன் முதற்படியாக, சுமார் ரூ. 15,000 செலவு செய்து பண்படுத்தி வைத்திருந்த அந்த 200 ஏக்கர் நிலத்தை, சர்க்காரிடம் திருப்பி ஒப்படைத்துவிட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு அனுப்பியுள்ளதாக ரெட்டியாருடன் நெருங்கிய தொடர்புள்ள நம்பகமான வட்டாரத்திலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

ஆச்சாரியாரின் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்ததற்காக, சந்நியாசியைப் போன்று ஒதுங்கி வாழும் ரெட்டியார்மீதே, ஆச்சாரியார் சர்க்கார், தனது பழி வாங்கும் படலத்தை ஆரம்பித்திருக்கிறது.

இதிலிருந்து ஒன்று புலனாகிறது—அதாவது, ஆச்சாரியாரை எதிர்ப்பவர்களுக்கெல்லாம் ஏதாவது ஒரு இடைஞ்சல் ஏற்படப் போகிறது என்பது புலனாகிறது.

—'ஜனயுகம்': 2-1-54

ஏமாற்றம்!

காரைக்கால், ஜன. 2—

சிட்டகாங் மலைப் பகுதியில், 'பட்டியா' என்ற இடத்தில் எண்ணெய்க்காக 9,500 அடிகள் தோண்டிய பின் பலன் ஏற்படாததால் இம்முயற்சி கைவிடப்பட்டது.

காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் கூட்டம் கூடாதாம்

கூட்ட வேண்டுமென்று டாக்டர் கோரிக்கை

சென்னை, ஜன. 2—

சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஜனவரி 6ம் தேதி நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

டிசம்பர் 27ந் தேதி நடக்க இருந்த கூட்டம் தான் ஜனவரி 6-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

டாக்டர் பி வரதராசுலு நாயுடு காங்கிரஸ் கட்சிச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சட்ட சபை காங்கிரஸ் கட்சிச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சட்ட சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் ஒத்திப்போடக் கூடாதென்றும் உடனடியாகக் கூட்ட வேண்டுமென்றும் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. (ச. கி)

'ஆலைகளில் பொருள்கள் தேங்கிக்கிடக்கின்றன!'

'கைத்தறியாளர் பட்டினி கிடக்கின்றனர்'

'மற்ற நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது'

'ஆனால்நம்நாட்டிலோவாழ்க்கைத்தரம்மகாமோசம்'

சென்னை, ஜன. 2—

"இந்தியாவில், விலைவாசி ஏற்றத் தாழ்வுகள், சர்வதேச விலைவாசிகளுடன் எவ்வித சம்பந்தமுமில்லாத விதத்தில் ஏற்படுகின்றன. மற்ற நாடுகளைவிட, நம் நாட்டில், வாழ்க்கைத்தரம் குறைவாகவே உள்ளது; யுத்தத்துக்கு முன்பு நம் நாட்டில் இருந்ததைவிடப் பாமர மக்களின் வாழ்க்கைத் தரம் தற்சமயம் குறைவாகவே உள்ளது."

"நம் நாட்டில் உள்ள பொருளாதார நிலைமையில், விசித்திரமான முரண்பாடுகள் காணப்படுகின்றன; உற்பத்தி அதிகரிப்பு, பணவசதி குறைவு விலைவாசி தூக்கல், கிராக்கி குறைவு, வாழ்க்கைத்தர உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு—இவையனைத்தும் ஏககாலத்தில் காணப்படுகின்றன."

"தொழில் துறையில் நெருக்கடி ஏற்பட்டு, ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இழக்கலாமென்ற பயம் தோன்றியுள்ளது; துணி ஆலைகளில் சரக்கு தேங்கிக் கிடக்கிறது; கைத்தறி நெசவாளரோ பட்டினி கிடக்கின்றனர்."

"மனித சக்தியைச் சீராகப் பயன்படுத்தி, விலைவாசிகளைக் குறைக்க, விவசாய அமைப்பில் மாறுதல்கள் செய்ய வேண்டும்; வேலை வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டும்; உற்பத்தியில் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சி தேவை. போக்கு வரத்து, விற்பனை வசதிகள் செய்து தரவேண்டும்."

—இவ்வாறு, 31—12—53-ல், ஆந்திரா வர்த்தக வெள்ளி விழா பொருளாதார மாநாட்டிற்குத் தலைமை வகித்த வாய்தா மார்க்கெட் கமிஷன் தலைவர் டாக்டர் பி. வி நாராயணசுவாமி அவர்கள் நாட்டின் பொருளாதார நிலைமையை விமர்சனம் செய்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

"இந்தியாவின் பொருளாதாரம், பிரதானமாக விவசாயப் பொருளாதாரமே; 1952—53-ம் ஆண்டில் இத்துறையில் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டது; நடப்பு வருடத்தில் மேலும் அபிவிருத்தி காணலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

"தொழில் துறையில் இதைவிட திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது; 1946-ம் ஆண்டு நாட்டில் 5000 பாக்டரிகள் தாமிருந்தன; இது, 1950-ம் ஆண்டு 7100 ஆக உயர்ந்தது: இது 40 சதவிகிதம் அதிகரிப்பு; உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

"இந்தியாவின் அயல் நாட்டு வியாபாரத்திலும் திட்டமான அபிவிருத்தி காணப்படுகிறது; இவ்வர்த்தகம் அதிகரித்து வருகிற போதிலும், இறக்குமதி அதைவிட அதிகம்; ஆகவே பாதக நிலைமையே நிலவி வருகிறது.

"தமது ஏற்றுமதிகள் உயர்ந்தாலொழிய வெளிநாட்டு வர்த்தக நிலைமையில் சாதக நிலை ஏற்படாது; இவ்விஷயத்தில் அரசாங்கத்துக்கு வர்த்தகர்கள் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

"பாசன வசதிகள் போதவில்லை; நீர் வசதியில் 6 சதவிகி

(4-ம் பக்கம் பார்க்க)

வேலூரில் தோழர் அண்ணாதுரை

காந்தியார் உருவச் சிலை திறப்பு விழா

★

வேலூர் (வடாற்காடு) நகராட்சி மன்றத்தார் அமைத்துள்ள உத்தமர் காந்தியார் உருவச் சிலையை, 3—1—54 அன்று மாலை 6 மணிக்கு, தோழர் அண்ணாதுரை திறந்துவைப்பார். நகராட்சி மன்றத்தினர் அவருக்கு காலை 9 மணிக்கு வரவேற்பு இதழ் வழங்குவர்.

மாலையில், கோட்டை வெளியில், 7 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் அண்ணாதுரை, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. ஆகியோர் பேசுவர்.

தூத்துக்குடி வழக்குக்கு நிதி வழங்கப்படும்.

நம் நாடு

திராவிடர் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2—1—54 சனி

வேண்டுமென்றே செய்த அவமரியாதை!

இந்திய அரசியல் சட்டம் 202-வது பிரிவு, ஒரு மாநில சர்க்கார், தனது வரவு-செலவுத் திட்டத்தை சட்ட சபையிலும், மேல் சபையிலும் ஒரே காலத்தில் கொண்டுவர வேண்டும் என்று வரையறுத்துக் கூறுகிறது. ஆனால், புறக்கடை வழியாக வந்து, சென்னை காங்கிரஸ் சர்க்காரில், 'பேயாட்டம்' போட்டுக் கொண்டிருக்கிற கனம் ஆச்சாரியார், இந்தச் சட்ட விதியையும் உடைத்தெறிந்து இருக்கிறார்.

சில நாளைக்குமுன், சென்னை சட்ட சபையில் புகுத்தப்பட்டு, உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கிற வரவு-செலவுத் திட்டம், சட்ட சபையின் ஒப்புதலுக்குக் கொண்டு வரப்பட்டதே - கனம் ஆச்சாரியாரின் தான்தோன்றித்தனத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினத் தொகுதியில் பெரும் பகுதியை, சட்ட சபையின் ஒப்புதலைப் பெறுமலே, ஆச்சாரியார் சர்க்கார் ஏற்கனவே செலவழித்துவிட்டது. சட்ட சபைக்குக் கட்டுப்பட்டது தான் ஒரு மந்திரிசபை குழு என்ற, அரசியல் சட்டக் கொள்கையை எல்லா வகையிலும் பாதுகாத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு கனம் ஆச்சாரியாருக்கும் உண்டு. ஆனால், ஆச்சாரியாரைப் பொருத்தவரையில், அரசியல் சட்டக் கோட்பாட்டைப் புறக்கணித்து நடந்து கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

அரசியல் சட்டத்தை எழுத்துக்கெழுத்து வழிகாட்டியாகக் கொண்டு நடக்க வேண்டும் என்று ஒன்றும் இல்லை யாது என, ஆச்சாரியார் நினைத்திருப்பதாக இருந்தாலும், அதன்கண் புதைந்துள்ள அறநெறி சாரத்தையாவது அவர் மேற்கொண்டொழுக முன்வர வேண்டும். ஆனால், அந்த நல்ல புத்தியும் ஆச்சாரியார் விஷயத்தில் பூஜ்யமாக இருக்கிறது. நாம் வைத்ததுதான் சட்டம் என்ற அகந்தையோடு தம் காலம் முழுதும் நடந்து பழக்கப்பட்டுவிட்ட ஆச்சாரியாருக்கு, அந்திய காலத்தில், ஏதாவது ஒன்றுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்ற நல்ல புத்தி பிறக்காதுதான்.

தமக்கு இயல்பாக உள்ள ஆணவத்தைக் கொஞ்சமாவது குறைத்துக் கொள்ளுவது கூடாது என்று அவர் கருதுவது போலத்தான், மக்களாட்சி நெறிகளும் சீரழியக்கூடாது என்றுதான் மற்றவர்களும் கருதுவார்கள். எனவே, அவர் மரியாதையாக மக்களாட்சி முறைக்குச் செவிசாய்த்து நடப்பவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, கண்ணன் காட்டிய வழிக்கு மேலும் விளக்கம் தீட்ட, குற்றாலம் செல்வதுதான் நியாயம். இதைப் பின்பற்றுவதை விட்டு, பதவியை குரங்குப் பிடி பற்றிக் கொண்டு, மந்திரி கை மாலையென ஆட்சி முறையை சீரழித்துக்கொண்டு இருப்பதை எந்த மானமுள்ள தமிழனும் ஒப்புக்கொள்ள மாட்டான். நிற்க,

இடைக்கால வரவு—செலவுத் திட்டம் சபையின் ஒப்புதலுக்கு சட்டசபையில் புகுத்தப்பட்டு, சட்டசபையின் ஆமோதிப்பைப் பெற்றுவிட்ட சரியாகப் பதினைந்து நாட்கள் கழித்து, சென்னை மேல்சபையில் ஆச்சாரியார் வரவு செலவுத் திட்டத்தைப் புகுத்தி இருக்கிறார்.

ஆச்சாரியாரின் இந்தப் போக்கை, பொறுப்பு வாய்ந்த மேல் சபை உறுப்பினர்களில் பெரும்பாலோர் சுட்டிக் காட்டி கண்ணியமாகச் சாடி இருக்கிறார்கள். ஆந்திர மாநிலம் பிரிந்து செல்லாத காலத்தில், ஏற்கனவே மேல் சபையில், இதுபோன்ற சம்பவம் ஒன்று நிகழ்ந்து, அப்பொழுதிருந்த மேல் சபைத் தலைவர், சர்க்கார் போக்கைக் கண்டித்திருக்கிறார் என்று எடுத்துக் கூறியும், இந்திய அரசியல் சட்டம் 202-வது பிரிவின் வாசகத்தை விளக்கிக் காட்டியும், தோழர் டி. புருஷோத்தமனார், கனம் ஆச்சாரியாருக்கு அறிவு கொளுத்தியிருக்கிறார். அதை டாக்டர் லட்சுமணசுவாமி அவர்களும் ஆதரித்து மேலும் சில கூறி இருக்கிறார்.

மற்றொரு உறுப்பினரான கே. பாலசுப்ரமணிய அய்யர், "சட்டப் பிரிவின் வாசகம் 'வரவு-செலவு மதிப்பீட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும்' என்று இருக்கிறது. ஆனால், திட்டம் கீழ்சபையில் நிறைவேறிவிட்ட பிறகு, அந்தக்கணமே, அது வரவு-செலவு மதிப்பீடு என்ற தன்மையில் மாற்றம் பெற்றுவிடுகிறது," என்று எடுத்துக் காட்டியுள்ளார். அதாவது, கீழ்சபை, சர்க்காரின் வரவு-செலவு மதிப்பை ஒப்புக் கொண்ட உடனே அது 'மதிப்பீடு' என்ற கட்டத்தைக் கடந்து விடுகிறது என்றும், கீழ்சபையின் ஒப்புதலுடன், 'சட்ட முத்திரை' பெற்றுவிட்ட ஒன்றை மேல சபையில் புகுத்துவதும், அதை மேல்சபை ஆராயப் புகுவதும் பொருளற்றது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுபற்றி பேசிய டாக்டர் வி. கே. ஜான் அவர்கள், கீழ் சபையின் ஒப்புதலுடன் மேல் சபையில் நுழைந்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை சபை ஆராயப் புகுவது, 'பிணப் பரிசோதனை' செய்வது போன்றதாகும் என்று வர்ணித்துள்ளார்.

இவ்வளவு தாக்குதலுக்கும் கனம் ஆச்சாரியார், சமாதானமாக ஏதோ சில பல கூறினார். உறுப்பினர்களின் அதிருப்தி தணியாததைக் கண்டு ஆச்சாரியார் இறுதியில் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். "ஒரே காலத்தில் இரு சபைகளிலும் வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதை நான் ஒப்புகிறேன்,' என்றும் விளக்கமாகக் கூறிவிட்டார்.

உறுப்பினர்கள் காட்டிய நியாயத்தை ஒப்பி, தாம் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்ட, கனம் ஆச்சாரியாருக்கு இயல்பாக உள்ள 'குரங்கு புத்தி' சும்மா இருக்கவில்லை. "சர்க்காரின் தவறை இப்போது எதிர்க்கக் கிளம்பியுள்ள உறுப்பினர்கள், ஏன், சிலநாள் முன்கூட்டியே எதிர்த்திருக்கக் கூடாது," என்று குதர்க்கமாகவும் கேட்டிருக்கிறார். அதற்கும் டாக்டர் ஜான் சுடச்சுடப் பதில் கொடுத்திருக்கிறார்.

'சர்க்காரின் ஆலோசனைப்படி, கவர்னர், சபை கூடும் தேதியைக் குறிப்பிட்டிருப்பதினால்தான், நாங்கள் முன்கூட்டியே எதிர்க்கவில்லை,' என்று டாக்டர் குறிப்பிட்டுள்ளார்.

தவறை ஒருமுறை ஒப்புக்கொள்ளுகிறவர்கள், மறுமுறை அதே தவறைச் செய்யாமல் இருக்க வேண்டும். அதுதான், தவறை ஒப்புக்கொள்ளுவதில் உள்ள உண்மையாகும். ஆனால், ஆச்சாரியார், தவறை ஒப்புக்கொள்ளுவது என்பது, அப்போதுள்ள சூழ்நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ள மேற்கொள்ளும் கீழான முறையேயாகும்; எதிர்ப்பின் வேகத்தைத் தணிக்கக் கையாளும் தந்திரமேயாகும்.

ஒரு கிரிமினல் குற்றவாளி, ஒரே குற்றத்தைத் தொடர்ந்து செய்து கொண்டே, நீதிபதியின் முன் நிற்கும்போதெல்லாம் மன்னிப்புக் கோருவது போன்றதுதான், கனம் ஆச்சாரியார் கோரும் மன்னிப்பும். எனவே ஆச்சாரியார் மேல் சபையில் கேட்டுக்கொண்ட மன்னிப்பு, கடைந்தெடுத்தக் கோழையின் செயலாகும் என்பதே நமது கருத்து.

ஆச்சாரியார் கேட்டுக்கொண்ட மன்னிப்பு, மேல் சபையை மதியாமல் நடந்து கொண்டு, உறுப்பினர்களுக்கு அவர் வேண்டுமென்றே செய்த அவமரியாதையை மறைத்து விட ஒருக்காலும் துணை செய்யாது!

குறித்துக் கொள்ளுங்கள்!

★

சென்னை, டிச. 31—

ஜூலையில் சென்னை சர்க்கார் எழுப்பிய கடனிலிருந்து சமாளிக்க உத்தேசித்திருக்கிற திட்டங்கள் குறித்து, இன்று மாலை சென்னை மேல்சபையில் ஸ்ரீ பர்திரி சுப்பிரமணியம் தகவல் அளித்தார். எழுப்பப்பட்ட கடனில் சென்னை சர்க்காருக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ 617 லட்சம். அந்தத்தொகையை பின் கண்டவாறு செலவிடலாமெனத் தெரிகிறது :—

மணி முத்தாறுத் திட்டம்: ரூ. 115 லட்சம்; மேட்டூர் கால்வாய்த் திட்டம்: ரூ. 26 லட்சம்; ஆரணியாறு திட்டம்: ரூ 12 லட்சம்; வல்லபாறு திட்டம்: ரூ. 11 லட்சம்; மங்களம் திட்டம்: ரூ. 11 லட்சம்; மற்றும் சிறிய திட்டங்களுக்கு ரூ. 10 லட்சம்: மொத்தச் செலவு ரூ 185 லட்சம்.

மின்சாரத் திட்டங்கள் :— பைகாரா நீர் மின்சாரத்திட்டம் : ரூ. 203 லட்சம்; மேட்டூர் நீர் மின்சாரத் திட்டம்: ரூ. 115 லட்சம்; பாபநாசம் நீர் மின்சாரத் திட்டம்: ரூ 90 லட்சம்; சென்னை மின்சாரத் திட்டம்: ரூ. 152 லட்சம்; இவற்றின் மொத்தச் செலவு: ரூ 561 லட்சம்.

இருவகைத் திட்டங்களின் மொத்தச் செலவு ரூ 746 லட்சம்.

ஒதுக்கப்பட்ட கடன் தொகை ரூ 617 லட்சமே. பாக்கிச் செலவைப் பொதுப் பணத்திலிருந்துதான் சரிக்கட்ட வேண்டும்.

ரஷ்யத் தங்கம் குவிகிறது

லண்டன், ஜன. 1—

லண்டனில் மேலும் ரஷ்யத் தங்கம் வந்து சேர்ந்துள்ளது. விசேஷ விமானம் மூலம் 2 டன் ரஷ்ய தங்கம் கொண்டு வரப்பட்டு, இங்கிலாந்து பாங்கியில் பத்திரப்படுத்தப்பட்டது.

பெரியாவின் வாழ்க்கை

பொதுவுடமை நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு

'இஷ்டியமையாது' என்கிறார் அமெரிக்க அதிகாரி

வாஷிங்டன், ஜன. 1—

சமீபத்தில் ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சியில் பேசுகையில், "சுதந்திர நாடுகளுக்கும் - கம்யூனிஸ்டு நாடுகளுக்குமிடையே வர்த்தகம் நடைபெற்றால், உலக சமாதானம் அபிவிருத்தியடையும்," என்று, அமெரிக்க அயல்நாட்டு நடவடிக்கைகள் ஸ்தாபன டைரக்டர் ஸ்டாஸ்ஸன் குறிப்பிட்டார்.

இவ்வாறு நடைபெறும் வர்த்தகத்தில் யுத்தத்திற்கு உதவும் பொருட்கள் பரிவர்த்தனம் கூடாது என, அவர் தெரிவித்தார். இந்நாடுகளுக்கிடையே வர்த்தகமே நடைபெறாமலிருக்கும் நிலைமை, யுத்தத்தை ஏற்படுத்தக் கூடுமென்று அவர் அபிப்பிராயப்படுகிறார்.

திபேத்து தீர்த்தயாத்திரி விழா 'அரோகரா!'

கல்கத்தா, ஜன. 1—

திபேத்து தேசத்தில், லாஸாவில் ஆண்டுதோறும் பிப்ரவரியில் நடைபெறும் புது ஆண்டு தீர்த்த யாத்திரை விழாவை, திபேத்தில் தற்பொழுது ஆட்சி புரியும் சீனக் கம்யூனிஸ்டுகள், இவ்வாண்டு தடைசெய்துள்ளனர்.

பஞ்சம் நிறைந்த இன்றைய சூழ்நிலையில், இவ்விழாவுக்கு வரும் யாத்ரீகர்களுக்கு உணவளிப்பது கஷ்டமாக இருக்குமென்று கம்யூனிஸ்டுகள் தெரிவித்துள்ளனர்.

ஐ. நா. உதவி

லட்சுமணபுரி, ஜன். 1—

உத்தரப் பிரதேச மருத்துவ நிலையங்களுக்கு, ஐ. நா. குழந்தைகள் அவசர நிதி உதவி நிறுவனம் 16,00,000 பவுண்டு பால் பவுடரை அளித்துள்ளது.

★

ரஷ்யாவின் முன்னாள் உதவிப் பிரதமராக இருந்த லாவ்ரெண்டி பி. பெரியா 1953 டிசம்பர் 23-ந் தேதி "ரஷ்யாவின் துரோகி" என குற்றஞ்சாட்டப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய 6 உதவியாளர்களும் இவ்வாறே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

38 ஆண்டுகளில், இவர் அடைந்த மிகப்பெரிய பதவியிலிருந்து அவர் உடனடியாக வீழ்த்தப்பட்டார். பதவியில் உயர்ந்த பெரியா அவ்விதமே அகற்றப்பட்டார்.

கட்சி நுழைவு

1899 மார்ச்சு 29-ந் தேதி இவர் ஜார்ஜியாவில் பிறந்தார்; 1915-ல், புரட்சிக் கட்சியில் சேர்ந்தார்; 1917-ல், போல்ஷவிக் கட்சி அங்கத்தினரானார்; 1921-ல், இரகசியப் போலீசில் சேர்ந்து உள்நாட்டு இலாகாவுக்குச் சம்பந்தப்பட்ட 'சேகா' என்ற பிரிவில் வேலை செய்தார்; 1921—23-ல், காக்கஸஸில் இரகசியப் போலீசு தலைவரானார். 1931—38-ல், அங்குள்ள கம்யூனிஸ்டுத் தலைமையை அழித்துவிட்டு, அந்தப் பிராந்தியத்தின் கட்சித் தலைவரானார்; 1938-ல், இரகசியப் போலீசின் உதவித் தலைவராக மாஸ்கோவுக்கு மாற்றப்பட்டார்.

மாஸ்கோவில்!

இவர் மாஸ்கோவுக்கு சென்றதும் அங்குள்ள இரகசியப் போலீசுத் தலைவர் எஜோவ், காணமற் போனார். கட்சியின் பல முன்னாள் தலைவர்களை ஒழிக்கும் படலத்தை, பெரியா இவ்வாண்டு ஆரம்பித்தார். 1941-ல், அவர் ரஷ்யாவின் உதவிப் பிரதமரானார். 1945—52 ல் ஸ்டாலின், மாலடோவ், மாலங்கோவ் முதலியவர்களுடன் இவரும் 'பாலிட் பியூரோ'வின் அங்கத்தினராக்கப்பட்டார்.

ஸ்டாலினுக்குப் பிறகு!

1953 மார்ச்சு 5ந் தேதி ஸ்டாலின் இறந்த பிறகு ரஷ்யாவின் முக்கிய மனிதர்களில் இரண்டாவது ஸ்தானம் பெற்றார்.

குற்றச்சாட்டு!

1953 மார்ச்சு 15-ந் தேதி ரஷ்யாவின் பிரதமர் பதவிக்கு இவர் மாலங்கோவை பிரரேபித்தார். ஜூன் 26-ந் தேதி சோவியத் பத்திரிகைகள், இவரை, "எதேச்சாதிகாரிகளின் பிரதிநிதி" எனக் குறிப்பிட்டு, கூட்டுப் பண்ணை முறையை திருத்துவதற்கு இவர் தடை செய்தார்' எனக் கூறின. பெரியா மறைந்தார்.

முடிவு!

1953 டிசம்பர் 23-ந் தேதி பெரியாவும், அவரது 6 கூட்டாளிகளும் தங்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை ஒப்புக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. எல்லோரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சிறை சீர்திருத்த மாநாடு

கைதிகளின் நல்வாழ்வுக்கு வழிகோலப்படும்

கட்டாக், ஜன. 1—

அகில இந்திய சிறை சீர்திருத்த மாநாடு, ஒரிசாவில் வருகிற மார்ச் மாதம் நடைபெற இருக்கிறது. சிறை சீர்திருத்தம் மட்டுமின்றி, குற்றங்களைத் தடுப்பது, கைதிகளிடையே சீர்திருத்தம், அவர்கள் விடுதலையானபின், ஆரோக்கியமான வாழ்வை நடத்தும்படி வழி செய்வது ஆகியவைகள் எல்லாம் இம்மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

செய்திச் சுருள்

★

பாலசமுத்திரம் திராவிட இளைஞர் கழகம்

29—12—53ல், தோழர் பி. ஏ. ரெத்தினம் தலைமையில் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில், தோழர்கள் ப. லோகநாதன் தலைவராகவும், பி. ஏ. ஆறுமுகம் துணைத் தலைவராகவும், பி. ஏ. ரெத்தினம் செயலாளர், பொருளாளராகவும், பி. ஏ. ராசலிங்கம் துணைச் செயலாளராகவும், டி. பெரியசாமி விளம்பர உறுப்பினராகவும், மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அ. இ. தபால்காரர் சங்கம்

27—12—53ல், தபால்காரர்கள்—கீழ்த் தர ஊழியர்கள் சங்கம் வாணியம்பாடி கிளையின் சார்பில் திருப்பத்தூர் நகராண்மைக் கழக ஆரம்பப் பள்ளியில், தோழர் கே. சீதாராமன் எம்.ஏ., தலைமையில் நடைபெற்றது. தலைவர் சொற்பொழிவுக்குப் பின், தோழர்கள் எம். கங்காதரம், வி. இராமகிருட்டினன், கே. மார்க்கபந்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கைவல்யம் சொற்பயிற்சி மன்றம்

அரக்கோணம், டிச. 31—

28—12—53ல், இம்மன்றத்தின் 12-வது கூட்டம் தோழர் மணிகண்டன் தலைமையில் நடைபெற்றபோது, 'போராட்டம்' என்பது பற்றி, தோழர்கள் அன்பரசு, வி. டி. சாமி, டபள்யூ. ஆர். இராமச்சந்திரன், சாகரத்தினம், முனிரத்தினம், வாசுதேவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருவள்ளுவர் முன்னணி கழகம்

சென்னை, டிச. 30—

20—12—53ல், பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முன்னணிக் கழகத் தேர்தல் கூட்டம், தோழர் கவிமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- தலைவர்: சி. ஆர். பாலசுந்தரம்; துணைத் தலைவர்: டாக்டர் தருமாம்பாள்; செயலாளர்: தா. கோ. அழகன்பன்; துணைச் செயலாளர்: இரா. மூர்த்தி; பொருளாளர்: க. இளங்கோவன்; பல்கலைத் திரட்டு ஆசிரியர்: இரா. சிட்டிபாபு; நூல் காப்பாளர்: வே. ந. லோகநாதன்; நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: இரணதீரன்; சமரசம்; ப. சு. மணி; எஸ். எஸ். மூர்த்தி; சந்தான கிருட்டினன்.

விருதை வி. வி. ஆர். படிப்பகம்

விருதுநகர், டிச. 29

விருதுநகர் வி.வி. இராமசாமி படிப்பகத்தின் உதவி நிதிக்காக விருதை. நா. இராமசாமி உருவாக்கிய "தளபதி" எனும் வரலாற்று நாடகத்தை அவ்வை சண்முகம் நாடக மன்றத்தினர் நகர சென்ட்ரல் சினிமா தியேட்டரில், தோழர் எம். எஸ். ராமசாமி தலைமையில் நடத்தினர்.

தலைவர் பேசுகையில், "வி. வி. ஆர், நாட்டின் நலம் கருதி அயராது உழைக்கும் பெரியார் என்றும், அன்னாரின் புகழின் திருவிடமான இப்படிப்பகம் சிறக்க யாவரும் தொடர்ந்து உதவுவது கடமை" என்றும் கூறினார். தோழர்கள் ந. இராமசாமியும், சோலையப்பனும் பேசினர்.

எஸ். ஆர். எம். யூனியன்

25—12—53ல், எஸ். ஆர். எம். யூனியன் கோவைக் கிளையின் தமிட்டிக் கூட்டம் வி. சி. வி. ஹாஸ்டலில் தோழர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றபோது, யூனியன் வளர்ச்சியைப் பற்றி தோழர்கள் சச்சிதானந்தம், வாசுதேவன், ஆலவந்தார் ஆகியோர் பேசினார்கள். வீட்டு வாடகை உயர்வையும், இலவச வீட்டு வாடகை சலுகையை நிறுத்தியதை எதிர்த்துப் போராடிய தோழர்களைப் பாராட்டியும், மேற்படி உத்தரவை ரத்து செய்யும்படி கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

டி. யு. சி. எஸ். தொழிலாளர் சங்கம்

சென்னை, டிச. 30—

25-12-53ல், மவுண்ட் ரோடு மகாஜன சபா ஹாலில் மேற்படி சங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பல தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டது.

தென்னிந்திய நடிகர் சங்கம்

சென்னை, டிச. 31—

20—12—53ல், சங்கக் காரியாலயத்தில், முதல் ஆண்டு பேரவைக் கூட்டம் நடைபெற்றது. 1953—54ம் வருட நிருவாகிகளின் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கப்பட்டன.

சங்கத்தின் இரண்டாம் பொதுச் செயலாளராக தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களை ஏகமனதாகப் பேரவை தேர்ந்தெடுத்தது.

களக்காடு விவசாய சங்க 8-வது ஆண்டு விழா

தாராவி—பம்பாய், டிச. 31—

27—12—23ல், தோழர் கே எம். பெருமாள் அவர்கள் தலைமையில் மேற்படி ஆண்டு விழா நடைபெற்றது. தோழர்கள் டி. எம். சித்திரை, நடராசன், ஆர். சுவாமிதாஸ், ஆர். கிருஷ்ணன் ஆகியோர் சங்க வளர்ச்சி குறித்தும், விவசாய சங்கம் இயங்க வேண்டிய முறை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

மக்கள் மன்ற 2ம் ஆண்டு விழா

ஓவர்டன்பேட்டை, டிச. 31—

25—12—53ல், மேற்படி மன்றத்தின் ஆண்டு விழாவில், சிறுவர்களுக்குள் விளையாட்டு பந்தயம் விடப்பட்டு பரிசுகள் வழங்கப் பட்டதுடன், கிராமத்தைச் சேர்ந்த அனைவருக்கும் சிற்றுண்டியும் அளிக்கப்பட்டது. பின்னர் மக்கள் மன்றத்தின் வளர்ச்சியைக் குறித்து, தோழர்கள் பா. ஜீவா, ஜே. சுத்தானியல், ஏ. ராஜமாணிக்கம், மா. அசரியா ஆகியோர் பேசினர்.

பூவனூரில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

20—12—53-ல், தோழர் என். வி. சுந்தரம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பி ராமையன் கொடி ஏற்றிவைத்தார். கடம்பூர் சாமிநாதன் கழகப் பாடல்கள் பாடினார். தோழர்கள்: ஆறுமுகம், பி. ம. அரசு, எஸ். எம். வைத்திலிங்கம், பி. எஸ். பி. சாமி ஆகியோர் "தி. மு. கழகமும், தற்கால அரசியலும்," என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

விக்ரமசிங்கபுரத்தில் பொதுக்கூட்டம்

இவ்வூர் தி மு கழக ஆதரவில், தோழர் பி. எ. சாமி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. தோழர் டி. கே. கோவிந்தசாமி பண் பாடினார். பின்னர், தோழர்கள்: இரா. சு மணி யம், சு. கந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நாவலர் பாரதியாருக்குப் பொன்னாடை போர்த்தல்

திருச்சி விசுவநாதம் வேண்டுகோள்

"மதுரை, பசுமலைப் பேராசிரியர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள், எழுபது ஆண்டுகளை எட்டிப் பிடித்து, முதுமை அடைந்த மூதறிஞர்; உடலிலே முதுமையும், உள்ளத்திலே இளமையும் தவழ்கின்ற ஒரு வீரத் தமிழ் மகன்; இன்றைய புலவர் தலைவன்; ஒரு நடமாடும் நூல் நிலையம் எனக் கூறலாம்.

தமிழுக்கும், தமிழருக்கும் அவர்கள் செய்துள்ள தொண்டுகள் பலவற்றை எண்ணி அவர்கட்குப் பொன்னாடை போர்த்திப் போற்றி மகிழ மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் முன் வந்துள்ளனர். இந்த நல்ல செய்தி தமிழகத்தில் உள்ள தமிழறிஞர்களையும், தமிழ் மக்களையும் மகிழச் செய்யும். இந்தப் பணிக்குத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்றவரை சிறிய தொகையையேனும் அனுப்பி உதவ வேண்டுகிறேன்.

பொருள் அனுப்பும் முகவரி:—"தி ஜி. பழனியப்பன், மதுரை திருவள்ளுவர் கழகத் தலைவர், விவேகானந்தா அச்சகம், 48, மேலமாசி வீதி மதுரை" என்பதே.

பொருள் அனுப்புவதோடு மட்டும் தமிழ் மக்களின் கடமை நீங்கிவிடாது. பொங்கற் பெரு நாள் கழிந்த மறுநாள் 17-1-'54 ஞாயிறன்று, பொன்னாடை போர்த்தும் திருநாளாகும். அந்நாளில் மக்கள் அனைவரும் மதுரைக்குச் சென்று நாவலர்க்குப் புலவர்கள் பொன்னாடை போர்த்தி, பெருஞ் செல்வமும் வாழ்த்தும் விழாவில் பங்கு பெற்றுச் சிறப்பிக்கவும் வேண்டும்.

இவ்விழாவில் பங்கெடுத்துக் கொள்வது, நாவலர் பாரதியார் அவர்களை வாழ்த்துதற்கு மட்டுமல்ல; தமிழகத்திற்குழைத்து மறைந்த புலவர் பெருமக்கள் பலரைப் போற்றாது கழிந்த நாட்களை எண்ணி வருந்துகின்ற உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கவும் துணையாகவிருக்கும்."

பொங்கல் விழா அமைப்புக் குழு

பெங்களூர், டிச. 30—

"26—12—53ல், பெங்களூர் மாவட்ட தமிழ் மக்களின் சார்பில் பொங்கல் விழா அமைப்புக் குழு கூட்டம் சமரச சன்மார்க்க இலைத்தில் தோழர் மா. ஐ இராசு தலைமையில் நடைபெற்றது. அதுசமயம், விழாக் குழு தலைவராக ஐ. உலகநாதன்; துணைத் தலைவராக பிரான்சிஸ்; செயலாளராக சி. த. சிங்கைத்தம்பி; துணைச் செயலாளராக தி மு குலசேகரன்; பொருளாளராக மா ஐ இராசு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்" என துணைச் செயலாளர் அறிவிக்கிறார்.

✶

பொங்கல் விழா

'பனப்பாடி பாடசாலையின் சார்பில், தோழர் ப. வை. ராமலிங்கம் தலைமையில் 14—12—53ல், தமிழர் திருநாள் பொங்கல் விழாவை, சிறப்புடன் நடத்துவதென மாணவர்களால் தீர்மானிக்கப்பட்டது. அதுபோது, தமிழாசிரியர் தோழர் கணபதி அவர்கள் "பொங்கல் விழா" என்பது பற்றி சொற்பொழிவாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது' என, தோழர் கா. செபராமன் அறிவிக்கிறார்.

தி. மு. கழகச் செய்திகள்

★

கருமலை எஸ்டேட்டில் தி. மு. கழகம் துவக்கம்

27—12—53-ல், தோழர் பி என். இராமானுசம் தலைமையில், கருமலை எஸ்டேட்டில் தி. மு க. அனுதாபிகள் அடங்கிய கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் அமைப்பு முறை பற்றியும், தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் பாட்டாளி மக்களுக்கு தி மு. கழகம் எப்படி வேலை செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் தலைவர் கூறியபின், தோழர்கள்: பிச்சைமுத்து, இரங்கநாதன் செயலாளர்களாகவும், காளியப்பன் பொருளாளராகவும், ஏ. என். மணி, அக்காமலை மணி, செட்டியப்பன், ஈ இராமசாமி, ஐயாப் பிள்ளை முதலியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

கூட்டத்தில் அரந்தாங்கி சதி வழக்கு நிதிக்கு ரூ 3—8—0 தோழர் பி. என். இராமானுசம் அவர்களிடம் கொடுக்கப்பட்டது

மணிநகர் தி. மு. கழகம்

ஆமதாபாத், டிச. 31—

27—12—53-ல், தோழர் புதுவை—வைத்தியநாதன் இல்லத்தில், மணிநகர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள்: மு. கிருட்டினன் செயலாளராகவும், வி. கே. வேலன் துணைச் செயலாளராகவும், சா. ஆறுமுகம் பொருள் காப்பாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: புதுவை—வைத்தியநாதன், சு கணேசனார், அ. குப்பன், கு. முத்துகுமாரசாமி, பி. மாரிமுத்து. து சிவஞானம், சி. இராமானுசம், ப சிங்காரம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழக இல்லம் தனியே அமைக்கும் பொறுப்பை, தோழர்கள்: சா. ஆறுமுகம், வி. கே. வேலன் ஆகியவர்கள் வசம் விடப்பட்டது.

வல்லவராயன்பட்டி தி. மு. கழகம்

23—12—53-ல், தி மு கழக உறுப்பினர் கூட்டம், தோழர் செ. கரிகாலன் தலைமையின் கீழ் நடைபெற்றபோது, தைத் திங்களில் 'தமிழ்த் திருநாள்' நடத்துவதென்றும், விழாவிற்கு தோழர் சி. பி. சிற்றரசை அழைப்பதென்றும்; நடப்பு வருடத்திற்கு புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதென்றும்; போராட்டத்தில் கலந்து சிறை சென்று திரும்பிய தி.மு கழகத் தோழர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

46-வது வட்ட தி. மு. கழகம்

சென்னை, டிச. 31—

"27—12—53-ல், பெரிய மேட்டு கிளை-தி மு கழக செயற்குழுக் கூட்டத்தில், அரந்தாங்குடி சதி வழக்குக்காக நிதி திரட்டி அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்தும், கழக வரவு-செலவு கணக்குகளும் மற்றும் இதர பிரச்சினைகளும் பரிசீலனை செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்டது." என்று செயலாளர் அ. குப்புசாமி அறிவிக்கிறார்.

பாண்டுப் தி. மு. கழகம்

25—12—53-ல், தோழர் கே. என். அய்யிர தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது அதுபோது, மாவட்டப் பிரதிநிதிகளாக தோழர்கள்: வி. தேவதாசன், எம் என். நாமன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், தோழர்கள்: டி. பொன்னதுரை, எம். பரமசிவம் ஆகியவர்களைக் குழுவில் சேர்க்கப்பட்டது.

சயன் தி. மு. கழகம்

பம்பாய், டிச. 30—

25—12—53-ல், சயன் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் ம. கு. பாலு தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள்: க. ஜான், ம. கு. பாலு மாவட்டப் பிரதிநிதிகளாகவும், கே. என். வரதராசன், வி. எ. ரசாக் நிர்வாகக் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

14—1—54 அன்று, உறுப்பினர் கூட்டமும், பொங்கல் விழாவையும், சயன்—'கோலிவாடா'வில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

பெரியார் நகர் தி மு. கழகம்

பெங்களூர், டிச. 30—

27—12—53ல் கூடிய தி. மு. கழகச் செயற்குழுவில், ஜன. 14, 15-ம் தேதிகளில் பொங்கல் திருவிழா கொண்டாடுவதென்றும், அன்று, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தென்காசி தி. மு. கழகம்

27—12—53ல், தோழர் எ. டபள்யூ. மக்தூம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் எஸ். அழகிரி செயலாளர்; எஸ். செல்லப் பாண்டியன் துணைச்செயலாளர்; ம. அ. ப. நாதன் பொருளாளர்; எம். எம். அகமதுசா, டி. குருசாமி மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தென்திருப்பேரை தி. மு. கழக செயற்குழு தேர்தல்

27—12—53-ல், தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், புதிய ஆண்டிற்கு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள்: டி. சீ எஸ். பன்னீர்செல்வம் செயலாளராகவும், மா. தமிழ்வண்ணன் துணைச்செயலாளராகவும், பெ. முத்துமாலை பொருளாளராகவும், கே எஸ். மணி மாவட்டப் பிரதிநிதியாகவும், சு. இரெங்கசாமி, இரா. அருணாசலம், பா. மோசை, ஆர். எஸ். பாண்டியன், ப. கணபதி, க. சங்கரன், அ. சின்னதம்பி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பேட்டை தி. மு. கழக செயற்குழுக் கூட்டம்

28—12—53ல், தி. மு. கழக செயற் குழுக் கூட்டம், கழகக் கட்டடத்தில், தோழர் எம். எ. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது அதுசமயம், அரந்தாங்குடி சதி வழக்கிற்கு நிதி சேர்த்துக் கொடுப்பதென்றும், திருநெல்வேலி சுற்றுப் புறங்களில் பரவியுள்ள காலரா நோய்க்குத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு நகர சபையாரை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

"திராவிட வீரன்"

பாளையங்கோட்டையில், தி. மு கழகத் தோழர் சோ. தங்கப்பாண்டியன், 25—12—53 காலை 7-மணிக்கு, வ. உ. சி. திடலில், இடைவிடாது 86-மணி நேரம் சைக்கிள் ஓட்ட ஆரம்பித்து 28—12—53 அன்று இரவு 9-மணிக்கு முடித்த பின், பாளையங்கோட்டையிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, திருநெல்வேலி சந்திப்பு வழியாக வந்தடைந்தது. 'திராவிட வீரன்' என்ற பட்டம் பொது மக்களால் அளிக்கப்பட்டு, வெள்ளிக் கடிகாரமும், டாலர்களும், வாழ்த்துப் பத்திரங்களும் கொடுக்கப்பட்டன.

கே. எஸ். பாண்டியன் படிப்பக முதலாவதாண்டு விழா

—— (:) ——

கடற்கரை பொதுக் கூட்டத்தில் நெடுஞ்செழியன், என். வி. நடராசன்

சென்னை, ஜன. 2—

நேற்று மாலை, திருவல்லிக்கேணி கடற்கரையில் பாண்டியன் படிப்பக முதலாவது ஆண்டு விழா நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கிற்று.

"தேச பக்தர் லாலா லஜபதி ராய் பிறந்த பஞ்சாபில், அண்மையில், ஒரு கூட்டத்தில், நேரு பேச இருந்தார். ஆனால், அவர் பேசும் மேடையிலேயே அகாலித் தலைவர் தாரா சிங் தோன்றி, 'பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில், நேரு இந்தக் கூட்டத்தில் பேசக் கூடாது,' என்றார். மக்களும் அதற்கு ஆதரவு அளித்தனர். நேரு திரும்பினார்.

"கருப்புக்கொடி பிடித்ததற்கே நம்மை 'காட்டுமிராண்டிகள்' என்று சொன்ன நேருஜீ, அகாலித் தலைவர் செயலைக் கண்டித்துப் பேசத் துணிவு இல்லாததேன்? 'தமிழர்கள் மானங்கெட்டவர்கள் - எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்வார்கள்,' என்ற எண்ணம் தானே?" என்று தலைமையுரையில் தோழர் நடராசன் குறிப்பிட்டார்.

★

தோழர் இரா. நெடுஞ்செழியன் பேச்சையில் குறிப்பிட்டதாவது:—

"வகுப்புவாதிகள் யார்? ஆச்சாரியாரா, நாங்களா?—என்று விளக்க ஒரு உதாரணம் கூறுகிறேன். நேற்றைய முன்தினம் ஆந்திர வர்த்தக சபை வெள்ளி விழா ஒன்றில் அவர் பேசுகையில், 'நானும், டாக்டர் ராதாகிருஷ்ணனும் உங்களுக்கு ஆசீர்வாதம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த விழாவுக்கு செய்தி அனுப்பிய டாக்டர் பட்டாபி, 'பிராமணர்களின் ஆசீர்வாதம் தேவையில்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், நாங்கள் பிராமணர்களாக இருந்தாலும் ஆசீர்வாதம் செய்கிறோம்; அதுமட்டுமல்ல; எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் பிராமணர்களின் ஆசீர்வாதம் தேவைதான்,' என்று கூறியிருக்கிறார்.

"ஆச்சாரியார் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இருக்கிறபொழுதே, தான் ஒரு இந்தியன் என்ற உணர்ச்சி சிறிதுமின்றி, இப்படி உயர் ஜாதி திமிர் வாதம் செய்து வருவதைக் கண்டு உண்மையில் எந்த மானமுள்ளவனும் சகிக்க முடியாது. இத்தகைய ஒருவரைக் கண்டு பார்த்து, வகுப்புவாதிகள் என்று கூறுவதானால் உண்மையில் ஆச்சாரியாரை இருக்கிறது. பிராமணன் என்ற ஒரே காரணத்திற்காக நாங்கள் ஒரு சமூகத்தை வெறுக்கவில்லை; அவர்கள் ஆணவத்தை எண்ணே கண்டித்திருக்கிறோம்" என்று விளக்கமாகப் பேசினார்.

தோழர்கள் டி. வி. நாராயணசாமி, என். எஸ். ராஜேந்திரன், துரை ஆகியோரும் பேசினர்.

கடைசியில், எஸ். எஸ். ராஜேந்திரன் பாடலோடு கூட்டம் முடிவுற்றது.

உள்ளத்தில் உறைந்து போன சி. ஆர். ஜாதி வெறி!

வாய்ப்பு நேரும்போதெல்லாம் வெளியாகின்றன!

★

"நானும், இராதாகிருஷ்ணனும் சேர்ந்து இந்தச் சங்கத்துக்கு ஆசீர்வதிக்கிறோம். நாங்கள் பிராமணர்களாக இருந்தாலும் ஆசீர்வதிக்கிறோம்."

"டாக்டர் பட்டாபி, தாம் அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில், பிராமணர்களின் ஆசீர்வாதம் உங்கள் வர்த்தகச் சபைக்குத் தேவையில்லை" என்று கூறியிருக்கிறார். நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை. வர்த்தக சபைகளுக்குப் பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், மற்றும் எல்லோருடைய ஆசீர்வாதமும் அவசியம்."

—ஆந்திர வர்த்தக சபை வெள்ளி விழாவில் ஆச்சாரியார் 1—1—54: 'சு. மி.'

★

'மேலே ஒட்டுகிறவன் பிராமணன்; எங்கேயாவது பஸ் நின்றுவிட்டால், ஓட்டுகிறவன் அதைப் பழுது பார்க்கமாட்டான்; கீழே மெக்கானிக் வேலை செய்வதற்கு சூத்திரன்தான் வரவேண்டும்.'

—டி. வி. எஸ். திறப்பு விழாவில் ஆச்சாரியார். 4—9—53: 'சு. மி.'

கல்கத்தா, ஜன. 1—

மேற்கு வங்கத்தில் 1,525 அகதிகளின் குடும்பங்களுக்கு இந்தியசர்க்காரால் 12,20,000க்கு மேல் பண உதவி செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவின்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தைத் தாய்கம் நாட்டில்பயன் படுத்திக் கொள்கிறோம்; சாகசி, ஏகருக்கு 1040 பவுண்டுகளை உற்பத்தியாகிறது; ஜப்பானில் ஒரு ஏகருக்கு 3479 பவுண்டு கண்டு முறைகிறது; மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை; லட்சக் கணக்கான மக்கள் தரிசாகக் கிடக்கின்றன.

"செல்வாதார, செலாவணி துறையில் நிலைமையை ஊக்கிரமாகச் சமாளிக்க வேண்டும்; வாழ்க்கைச் செலவு குறிப்பிடமுடியாத வர்த்தகத்தில் ஊக்கமளிக்கும் படியான அமைப்பைக் கட்டிப் படுத்தவேண்டும்; மூலதனம் கிடைப்பதற்கு வசதியளிக்க வேண்டும்.

"இந்தியாவில் வருபவர் புதிய தொழில்களில் பிரவேசிக்க உதவி செய்வது அவசியம்.

"அத்தியாவசிய பொருள்கள் சம்பந்தப்பட்ட தொழில்களையாவது அரசாங்கம் அமைக்க வேண்டும்."

'நம் நாடு' ஏஜண்டுத் தோழர்கட்கு

"நம் நாடு" டிசம்பர் மாதத்தில் 1-1-54, 2-1-54 தேதிகளில் எல்லா ஏஜண்டுத் தோழர்களுக்கும் அனுப்பியுள்ளோம். 10-1-54-க்குள் பில் பாக்கித் தொகையை ஏஜண்டுத் தோழர்கள் இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டுகிறோம். இக்குள்ள டிபாசிட் தொகைக்கு மேல் பில் பாக்கி ஏற்படும் சமயம், முன் அறிவிப்பின்றியே, "நம் நாடு" அனுப்புவதை நிறுத்தப்படுமென்பதையும் ஏஜண்டுத் தோழர்கட்குத் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

ஏஜண்டு ரத்து செய்யப்பட்டு, பழைய பாக்கியை இதுவரையில் அனுப்பாத தோழர்கள் இனியும் காலங் கடத்தாமல் உடனே அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்: "நம் நாடு," இராயபுரம், சென்னை.

2—1—54

கருப்பையா கொலை வழக்கு விசாரணை

பிராசிகியூஷன் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்தன

மதுரை, டிச. 30—

கருப்பையா கொலை சம்பந்தமாக பூக்கடைத் தெரு பாண்டி என்பவர் மீது போலீசாரால் தொடரப்பட்டுள்ள வழக்கு, இன்று தாலுகா சப்-மாஜிஸ்திரேட் இராமநாதன் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது, வடக்கு சரகம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஜி. ஜெகநாதன் அரசாங்கத் தரப்பில் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"நான் வடக்குச் சரகம் போலீஸ் இன்ஸ்பெக்டராகக் கடந்த 22—9—53-ந் தேதி முதல் இருந்து வருகிறேன்; 5—10—53-ந் தேதி மாலை 7 மணிக்கு, மேல மாசி வீதியில் டியூட்டியில் வந்து கொண்டிருந்தேன்; மேல மாசி வீதியும், காக்கா தோப்புத் தெருவும் சந்திக்கும் இடத்தில் சத்தம் கேட்டது; வாசிங் கிருஷ்ணசாமி தேவர் என்னிடம் வந்து விசாரித்தேன்; கிருஷ்ணசாமி தேவர் கண்ணுடைய வெட்டுகிறார்கள் என்று; அவருடைய பெயரைச் சிலர் தாக்கிவிட்டதாகவும், தங்கவேலு என்பவரையும் வெட்டிவிட்டதாகவும் அவர் சொன்னார்; அவர் அருகே இவர்கள் இருவரும் இருந்தார்கள்; இவர்கள் உடலில் வெட்டுக் காயங்கள் இருந்தன; அவர்களை லாரியில் ஏற்றிக் கொண்டேன்."

"கருப்பையாவைத் தூக்கிக் கொண்டு காக்காத்தோப்பு தெரு பக்கம்போனதாக கந்தன் என்னிடம் சொன்னார்; நான் அங்கு சென்று பார்த்தேன்; கருப்பையா வெட்டுப்பட்டுக் கிடந்தார்; இச்சம்பவம் நடைபெற்ற சமயம் மழை பெய்திருந்ததால் இரத்தத்தைப் பார்க்க முடியவில்லை; கருப்பையாவின் உடல் பூராவும் வெட்டுக் காயங்கள் இருந்தன; அவரையும் லாரியில் ஏற்றிக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றேன்; தல்லாகுளம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை, காயமடைந்தவர்களிடம் வாக்கு மூலம் பெற்று, அதை பி. 2 போலீஸ் நிலையத்திற்கு அனுப்பும்படி உத்தரவிட்டேன்; இந்த சம்பவமாக கந்தசாமி, இறந்துபோன கருப்பையா, மாலையம்மாள், தங்கவேலு, சண்முகம், எஸ். பி. மங்கைப்பெருமாள், கிருஷ்ணத் தேவர், நாராயணன், கோபால், கப்பையாத் தேவர், ஆகியோரை நான் விசாரணை செய்தேன்; கந்தனுடைய பெயரையும் பார்வையிட்டேன்."

"விசேட போலீஸ் ஹெட் கான்ஸ்டபிள், 8—10—53-ந் தேதி, பாண்டியனை கைது செய்து கொண்டு வந்தார்; பாண்டியை, வைத்தியசாலையில் உள்ள காயமடைந்தவர்கள் அடையாளம் காண்பித்தனர்; பின்னர் அவர் ரிமாண்டு செய்யப்பட்டார்; திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும், இனிஜர் காங்கிரசாருக்கும் சம்பவம் நடைபெற்ற காலத்திற்கு முன்பே விரோதம் இருந்து வந்தது; இறந்துபோன கருப்பையா வாதியாகவும், தி. மு. கழகத்தினர் எதிரிகளாகவும் உள்ள வழக்கு ஒன்று இருக்கிறது."

பின்னர் டாக்டர் விஜயராகவன், சப்-மாஜிஸ்திரேட் திரு. டி. கே. வெங்கட்ராமன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

★

மதுரை, டிச. 31—

இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மதுரை அரசாங்க வைத்தியசாலை டாக்டர் டேவிட், அரசாங்கத் தரப்பில் சாட்சியமளித்தார். அப்போது, அவர் கூறியதாவது:—

"காயமடைந்தவர்கள் அன்று வரும் சப்-மாஜிஸ்திரேட் முன் வாக்குமூலம் கொடுத்தனர்," என்றார்.

இத்துடன் அரசாங்கத் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்தன. எதிர் தரப்பு சாட்சியங்கள் விசாரணைக்காக வழக்கு, 18—1—1954-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தியா-பாக் 'போர் கிடையாது' என்று ஒப்பந்தம் செய்வதில் பொருள் கிடையாதாம்

—— (:) ——

'வெண்ணெயா, சுண்ணாம்பா' என்பதைக் களத்தில் காணலாமென முகமது அலி சவடால்!

கல்கத்தா, ஜன. 2—

"மார்வாரிகளுக்கு லாபம் ஒன்றே குறியாக இருக்கலாகாது என்றும், மனமாற்றம் ஏற்படவேண்டும்" என்றும் சேத் கோவிந்த தாஸ், எம்.பி., மார்வாரி மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

"இன்றுள்ள சூழ்நிலையில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் கிடையாது என்று ஒப்பந்தம் செய்து கொள்வதில் பொருள் கிடையாது" என பாக் பிரதமர் முகமதலி கூறினார்.

"நமக்குள்ளாக இருந்து வரும் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளாத வகையில், அத்தகைய ஒப்பந்தம் செய்து கொள்வதினால் நம்பிக்கை பறந்து விடாது. இருந்து வரும் பிணக்கில் பகை முடும் கிருமிகள் இருந்து வருகின்றன" என்று நிருபர்களிடம் மேலும் கூறினார்.

"எந்த நாட்டின் மீதும், படையெடுக்கும் நினைப்பு பாகிஸ்தானுக்குக்கிடையாது; அதிலும் இந்தியா மீது துளியும் கிடையாது" என்றும் அவர் அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

"மேற்கு ஜெர்மனியில், ருஷ்ய சந்தேகம் செருகுவது போல, ருஷ்ய ஆக்ரமிப்பு தொடர்பாக பாக்கின் பாதுகாப்பு பாதிக்கப்பட கூடும்" என்று அமெரிக்கர் ஒருவர் கூறியுள்ளதைக் குறித்து நிருபர்கள் கேட்டதற்கு, "யார் வெண்ணெயென்று இப்பரிட்சையில் கூட்டுப்பட்டு; அதன் பலனையும் அவர்களே பெறட்டும். பாகிஸ்தான் வெண்ணெயாக இருப்பதற்கு பதிலாக சுண்ணாம்பு பாறையாக இருக்கட்டும்" என்றார்.

வட சென்னை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு படிப்பகம் முதல் ஆண்டு விழா

3—1—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு

வடசென்னை பண்டிட் டவுன் (கூவலறை மைதானம்)

தலைவர்: காஞ்சி-கல்யாணசுந்தரம்

பேசுவோர்: மு. கருணாநிதி, முகவை ஆர். எஸ். பாண்டியன்

சிக்கியர் செய்ததும் 'சிறுபிள்ளைத்தனம்' என்கிறார் பண்டிதர்

தனது உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக்கொண்டதற்கு தன்னையே, தான் பாராட்டிக்கொள்கிறார்

சாந்தினி நகர், டிச. 31—

இந்தியப் பிரதமர் நேரு, இன்று மாலை டி. கே. ஜெ. க. காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில், தன்னால் கோபத்தை அடக்க முடியுமென்று கேலியாகச் சொன்னார்.

இதுபற்றி, பஞ்சாபில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவத்தைக் குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது:

"நான் இதைப் பற்றிய கூட்டங்களில் ஒன்றைப் பற்றிப் பேசியிருக்கிறேன். கூட்டத்தில் சில கலாட்டா செய்ய சிக்கியர் முயன்றனர். இது சிறுபிள்ளைத்தனம். நான் மட்டும் அவர்களின் செய்கையைக் கண்டு, ஆத்திரமூட்டிப் பேசியிருந்தால், நிலைமையே வேறு மாதிரி இருந்திருக்கும்.

ஆனால், இதற்கு நேர்மாறாக நான் பேசாமலும், ஒன்றும் செய்யாமலும் இருந்துவிட்டேன். சிறிதுநேரம் கழித்து கூட்டத்திலிருந்து வெளிவந்துவிட்டேன். இதுமாதிரி, நான், வாழ்க்கையில் எவ்வளவோ கடினமான நிலையைக் கடந்திருக்கிறேன்; எனினும், என் உணர்ச்சியை என்னுடைய அடக்க முடிந்ததைப் பற்றி நிச்சயமாக சந்தோஷமடைகிறேன்," என்றார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.